**<u>04.03.2026</u>**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 145/2025</u>

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | | |
| த/பெ | பெருமாள் | | |
| கிராமம் | சின்னபாபுசமுத்திரம் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 50 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 04.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது. ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார். எனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். எங்கள் ஊர் கோயில் அருகில் காவல்துறையினர் என்னிடம் ஒரு எழுதாத வெள்ளை தாளில் இந்த கையெழுத்தை வாங்கினார்கள். என்னுடன் மற்றும் ஒரு ராஜேந்திரன் என்பவர் கையெழுத்து போட்டார். மேற்படி பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரணை எதுவும் செய்யவில்லை.

மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியமாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் அளித்ததற்கு இணங்க, சாட்சி பிறழ் சாட்சியமாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

எனது போலீஸ் விசாரணையில் கடந்த 23/12/2023ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரும் சின்ன பாபு சமுத்திரம் ஆர்ச் அருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, கண்டமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள், எங்கள் இருவரையும் அழைத்து எங்கள் ஊர் ரவுடி தாண்டவராயன் மகன் அறிவு ஆர்ச் அருகே ரோட்டில் இரு சக்கர வாகனத்தில் ஒரு சிறுவனை வழிமறித்து கொள்ளையடித்த சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார் என்றும், நாங்கள் இருவரும் சம்மதத்தின் பேரில் அதில் கையெழுத்து போட்டோம் என்றும், நான் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை:

இல்லை.